## நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2016

நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக்கூற்று விரிவான வருமானக்கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் ஆம் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### மறுப்பு அபிப்பிராயம் - அதிகாரசபை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான

மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதிகாரசபையின் துணைக் கம்பனிகளாக வோடர்ஸ் ஏஜ் லிமிடெட், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் (தனியார்) கம்பனி மற்றும் பேலியகொடை வெயார் ஹவுஸ் தொகுதி கம்பனியின் 2016 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தன. இந்த 04 கம்பனியினதும் முழுப் பங்குரிமையும் அதிகாரசபைக்குச் சொந்தமாக இருந்தது.

(ஆ) நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமை கையளிக்கப்பட்ட ரூபா 642.5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடம், வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் பாவனைக்காக ஈடுபடுத்தப்படுகின்றமையால் அப்பெறுமதிக்கு பங்குகளை விநியோகிப்பதற்காக துணைக்கம்பனியால் கோரப்பட்டிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பங்குகள் விநியோகித்தல் இடம்பெறாதிருந்ததுடன் பங்குகளை விநியோகிக்கும் இடைக்கப்பாடொன்று காணப்படுவதாக (pending allotment of shares) வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான உடன்படிக்கையொன்று மேற்கூறப்பட்ட கம்பனிக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு ரூபா 200 மில்லியன் அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் துணைக் கம்பனியான வோட்டர்ஸ் எஜ் கம்பனியின் முதலீடாக ரூபா 842.5 மில்லியன் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை – அதிகாரசபை**

**2.3.1 கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் குறைபாட்டின் காரணமாக கணக்காய்வு விடயப்பரப்பின் வரையறை**

அதிகாரசபையினால் கணக்கு வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணனிசார்ந்த கணக்கீட்டு முறைமையில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக பல வருட காலம் முதல் கணக்காய்வினால் விடயங்கள் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வழுக்களை சரிசெய்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணனி சார்ந்த கணக்கு வைத்தல் முறைமையில் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படாமை, சரியாகவும் ஒழுங்குமுறையாகவும் கணக்குகளை வகைப்படுத்தும் திட்டமுறைமையொன்று (coding) பயன்படுத்தப்படாமை, சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளில் விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத வகையில் மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டமை, கணக்காய்விற்கு கிடைக்கின்ற நிதியாண்டிற்குரிய கணக்குகளின் தரவுகள் தனித்தனியாக ஒதுக்குவதிலுள்ள வசதியீனம், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்குரிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை மற்றும் ஆகக்குறைந்தது வருடத்திற்குரிய பரீட்சை மீதியை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமை என்பன இந்தக் குறைபாடுகளுக்கிடையே விஷேடமானதாகும்.

கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் உருவாகின்ற கணக்கு தரவுகளின் சரியான தன்மை, ஏற்றுக்கொள்ள முடியும் எனவும் மற்றும் கணனி முறைமையின் அண்மித்தல் முறையான பாதுகாப்புத்திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு

அதனை அமுல்படுத்துவதற்கு நவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முறைமையில் முறையான கணக்காய்வு வசதிகள் (Audit Trail) இல்லாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பிரச்சினையுடனான நிலைமையில் கணக்காய்வு விடயப்பரப்பு எல்லையில் தாக்கமளித்திருந்தது.

**2.3.2 இலங்கைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணங்காமைகள் எண்ணிக்கப்பட்டன.

(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07

(i) நிதிநிலைமைக் கூற்றில் காணப்படுகின்ற நிதி முதலீட்டின் கீழான பெறுமதி ரூபா 4,488 மில்லியன் தொகையான மீள்கொள்வனவுக் கணக்குகள் முதலீடு (Investment In Repos) மற்றும் ரூபா 1,559 மில்லியன் நிலையான வைப்பு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சிறந்த வட்டி விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதி தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நகர அபிவிருத்தி சார்ந்த நிகழ்ச்சித்திட்டத்தை (UDSP) அமுல்படுத்துவதற்காக ரூபா 37.62 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருருந்த போதிலும், அது தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07 (SLFRS) இன் பிரகாரம் முற்செலுத்தப்பட்ட பதவியணியினர் கிரயம் ரூபா 53 மில்லியன் பெறுமதிக்குரிய நியாயமான பெறுமதியை சீராக்கும் போது ஏற்பட்ட இழப்பு, நட்டங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01

(i) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் தொடர்ந்து வரும் வருட காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்கள், நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், எதிர்வரும் வருடங்களில் செலுத்த வேண்டிய ரூபா 3.2 மில்லியன் தொகையான பணிக்கொடை கொடுப்பனவுகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம், 2016 ஆம் ஆண்டிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பல்வேறு செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,859 மில்லியன் மூலதன நிதிஏற்பாடு உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிறுவனத்தால் பேணப்படுகின்ற ஒதுக்கங்களின் தன்மை மற்றும் அவற்றைப் பேணிச் செல்வதற்கான நோக்கம் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றறில் காண்பிக்கப்பட்ட ரூபா 55 மில்லியன் தொகையான நிச்சயமற்ற நிதியம் மற்றும் ரூபா 8.4 மில்லியன் தொகையான மூலதன ஒதுக்கங்களைப் பேணிச் செல்லும் நோக்கம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07

---

(i) தொகுதிக் கடன் வட்டித் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 551.8 மில்லியன் தொகை, காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்குப்பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தொழிற்படு மூலதன முரண்களில் சீராக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டுள்ள தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 16,272,210 ஆக இருந்ததுடன் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 17,519,171 ஆனமையால் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 1,246,961 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 17

---

நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 19,940 மில்லியன் தொகையான பிற்போட்ட குத்தகை வாடகை (Differred Lease Rent) தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 23

---

2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளின் போது நகர் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்காக விநியோகிக்கப்பட்ட தொகுதிக் கடன்களுக்கான வட்டிச் செலவினம் ரூபா 1,705.83 மில்லியன் தொகையான கடன் பெறுவனவுக் கிரயம் (Borrowing Cost) ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும், இலங்கை கணக்கீட்டு நியமம் 23 இல் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் தொகுதிக்கடன் வட்டி மீளளிப்பிற்காக பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 2,759 மில்லியன் தொகைக்கு எதிராக மேற்கூறப்பட்ட மூலதனமாக்கப்பட்ட கடன் பெறுவனவுக் கிரயம் ஈடுசெய்யப்பட்டமையால் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்ட ரூபா 1,705.83 மில்லியன் கடன்பெறுவனவுக் கிரயத்தின் பெறுமதியில் அச் சொத்துக்கள் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 1,053.17 மில்லியன் தொகை கடன் பெறுவனவுக் கிரயம் (Borrowing Cost) மீளளிப்பு இலாபமாக ஏனைய வருமானத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் பெறுவனவுக் கிரயத்தை விஞ்சி பொதுத் திறைசேரியிலிருந்து பணம் பெறுவதற்கான காரணமான விடயங்கள் மற்றும் பொதுத் திறைசேரியிலிருந்து மேலதிகமாகப் பெறப்பட்ட தொகையொன்றை வருமானமாக இனங்கண்டமைக்கு காரணமான விடயங்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24

---

மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக கணக்காய்வு செய்யப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் துணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து ரூபா 5,438,553 தொகை கிடைக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் இதனுடன் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை.

(எ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 28

---

மூன்று துணைக் கம்பனிகளின் முதலீடாக ரூபா 128.8 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த முதலீடுகளுக்குரிய நலன்களை இனங்காண முடியாமைக்கும்/ வருமானத்தை அட்டுறு செய்யாமைக்கும் போதியளவான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37

---

(i) அதிகாரசபையின் துணைக் கம்பனியான பேலியகொட வெயார் ஹவுஸ் கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 449 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த முதலீட்டுப் பெறுமதி குறைவடைந்தமைக்காக நூறுசதவீத நிதிஏற்பாடு 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கம்பனி 2013 ஆம் ஆண்டு முதல் இலாபம் பெறுகின்ற நிலையில் அந்த நிதிஏற்பாட்டை மீண்டும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 யூலை வரை ஊழியர் சேமலாப நிதிய ஒதுக்கீட்டின் போது வாழ்க்கைச் செலவுப் படி உரித்தாக்கப்படாமையினால் காலப்பகுதிக்காக மிகைக் கட்டணமாக்கப்பட்ட ரூபா 60.5 மில்லியன் தொகையான மிகைக் கட்டணம் ஏற்றுக்கொள்ளல் நிச்சயமற்றதாக இருந்தது. நிகழத்தக்க பொறுப்பின் கீழ் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு அதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மிகைக் கட்டணத்திற்குரியதாக மேலும் அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய ரூபா 6.5 மில்லியன் தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 கணக்கீட்டுக் கொள்கை**

---

அதிகாரசபையினால் கையேற்கப்பட்ட காணிகளுக்குரிய இழப்பீடு செலுத்துதல் மற்றும் காணிகளை அகற்றும் போது வருமானத்தை இனங்காணும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் காணிக்காக அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வாற்காக அதிகாரசபையினால் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 261 மில்லியன் தொகை பொறுப்பொன்றாக இணங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பொறுப்புக்கள் அந்த செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பொறுப்புக்கள் அந்த அளவால் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படாத இந்த செலவில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்படாமையின் காரணமாக அந்த ஆண்டின் இலாபம் மிகை மதிப்பீட்டிற்குள்ளாகியிருந்தது.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடைப் பொறுப்புக்கள் ரூபா 245.9 மில்லியனாக இருந்ததுடன் ஆயுட்கால எண்ணிக்கை அறிக்கையிடல்களின் படி (Actuarial Valuation Report) அது ரூபா 242.2 மில்லியனாக இருந்த போதும் இந்த வேறுபாட்டிற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) தற்போது நாட்டில் அமுலில் இல்லாத வரி, அதாவது அரச பாதுகாப்பு வரி (NSL) மற்றும் பொருட்கள், சேவைகள் வரி (GST) ரூபா 36 மில்லியன் தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது அறவிட வேண்டிய அரசாங்க வரி கடன்பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணமான ரூபா 1,355,452 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையினால் 2014 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட 04 கம்பனிகள் தொடர்பாகவும் அதன் ஆரம்ப மூலதனமான 4,000 பங்குகளுக்காக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மெரய்ன் ரைவ் (Marine Drive Project) வீதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக அதிகாரசபைக்குரிய கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள 02 காணிக் கூறுகள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது கையேற்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காணிகளின் சரியான கிரயத்தை இனங்கண்டு ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் பெறுமதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காணிகளின் பெறுமதி மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) சுய மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக ரூபா 10,029,259 தொகையான வரிப் பொறுப்பை இனங்கண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. வரி வருமானத்திற்காக சீராக்கப்பட்ட இலாபத்தை கணிப்பீடு செய்யும் போது குத்தகைக் கொள்வனவு அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 232 மில்லியன் அதாவது வருமானப் பாய்ச்சலாகக் கருதி அகற்றுதல், மீளாய்வாண்டின் காணி விற்பனை இலாபம் ரூபா 104,041,994 தொகை மற்றும் நிலையான சொத்துக்கள் விற்பனை இலாபம் ரூபா 4,702,160 தொகை வரி வருமானத்திற்காக சீராக்கப்பட்ட இலாபத்தை கணிப்பீடு செய்யும் போது ஏனைய வருமானப் பாய்ச்சலாக குறைத்து காண்பிக்கப்படாமையின் காரணமாக சுய மதிப்பீட்டு அடிப்படையில் வரிப் பொறுப்பைக் கணிப்பீடு செய்யும் போது வியாபார நடவடிக்கைகளில் சீராக்கப்பட்ட நட்டம் ரூபா 123,441,054 இனால் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) பூர்த்தி செய்யப்பட்ட 05 செயற்திட்டங்களின் கிரயம் ரூபா 1,248.23 மில்லியன் தொகையை மூலதனமாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் நடைமுறை வேலையாக (Capital Working Progress) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வோட்டர்ஸ் ஏஜ் துணைக்கம்பனியிலிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 4,000,000 ஆக இருந்த போதிலும், அக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையினால் அக்கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,438,553 ஆனமையால் இந்த மீதிகளுக்கிடையே ரூபா 9,438,553 ஆன வேறுபாடு அதவானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அதனோடொத்த பட்டோலைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கும் இடையே ரூபா 93.8 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்குகளின் விடயம் | பெறுமதி (ரூபா.மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | முதலீடு செய்யப்பட்ட ஆதனம் | 71,432 | விரிவான பட்டோலை, காணிப்பதிவேடு |
| (ஆ) | உள்ளூராட்சி கடன்கள் | 647 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் விரிவான பட்டோலை |
| (இ) | காணிக்காகச் செலுத்த வேண்டிய கடன், செலுத்த வேண்டிய வைப்பு மற்றும் முற்பணம் | 21,156 | |
| (ஈ) | (i) வருமானக் கணக்குகள் - 04 | 2,506 | விரிவான பட்டோலை |
| | (ii) செலவினக் கணக்குகள் - 02 | 463 | |
| (உ) | காணி கையேற்றல் (நகர புனர்வாழ்வு செயற்திட்டம் 58 ஏக்கர் அளவில்) | - | உபயோக ஆவணங்கள் |
| (ஊ) | நிலுவையாக இருந்த பதவியணியினர் கடன்கள் | 200 | விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு, அறவிடுவதற்குள்ள வழிமுறைகள் தொடர்பான விபரங்கள் |

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 அரசாங்க நிறுவனங்களிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 123 மில்லியன் அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 02 நிறுவனங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம், அந்த நிறுவனத்தின் மூலம் அதிகாரசபைக்கு எந்தத் தொகையும் செலுத்தப்படாதிருந்ததுடன் இரண்டு நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 2.5 பில்லியனாக இருந்தது. அவ்வாறே ஏனைய அரச நிறுவனமொன்றிலிருந்து ரூபா 40 மில்லியன் கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அதிகாரசபையினால் அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 52 மில்லியனாக இருந்தது. மேலும் அதிகாரசபையினால் இரண்டு அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு ரூபா 69 மில்லியன் செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அரசாங்க கூட்டுத்தாபனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 393 மில்லியன் ஆனமையால் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களும் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இந்த கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்ததுடன் அந்த மீதியும் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையினால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 2,900 மில்லியன் ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 315.5 மில்லியன் தொகையான நிலுவை மாதாந்த வாடகைக் கட்டணம், பயன்படுத்தல் கட்டணம் மற்றும் வாடகைக் கொள்வனவு தவணைப் பணத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 91.9 மில்லியன் அதாவது 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதிவரை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அதிகாரசபைக்கு அறவிட வேண்டியிருந்த மாதாந்த வாடகை கடன்பட்டோர் மீதி ரூபா 55 மில்லியன் ஆகவும், வாடகை கொள்வனவு கடன் மீதி ரூபா 19 மில்லியன் ஆகவும் இருந்தன. அவ்வாறே வாடகைப் பணம் செலுத்தாமையினால் வாடகை உடன்படிக்கை இரத்தான வாடிக்கையாளர்களிடமிருந்து 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 66 மில்லியன் மாதாந்த வாடகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(உ) 03 நிறுவனங்களுக்கு நீண்ட கால வாடகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்த காணிகளிலிருந்து ஒரே தடவையில் கிடைக்க வேண்டிய ரூபா 119.14 மில்லியன் கூட்டுத்தொகையான வாடகை நீண்ட காலமாகக் கிடைத்திருக்கவில்லை. அதனால் ஒரு நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்வேறு மூலதன நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 4,163 மில்லியன் மீதியில் ரூபா 181 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடிக்கையாளரை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கோ அல்லது மீண்டும் வருமானமாகக் கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் 5.2.6 ஆம் பிரிவு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.4 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைச் சபை 05 பேர்களை உள்ளடக்கியிருக்க வேண்டியிருந்தமை ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் சில ஆட்சேர்த்தல்களுக்காக நேர்முகப்பரீட்சை சபையில் 04 உத்தியோகத்தர்களும் 03 உத்தியோகத்தர்களுமாக பங்குபற்றியிருந்தனர். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 380 | அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட அதிகார சபையினால் புதிய வங்கி நடைமுறைக் கணக்கொன்று திறக்கப்படும் போது திறைசேரியிலிருந்து அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தேசிய அபிவிருத்தி வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக அதன் படி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | |
| (i) 383 ஆம் பிரிவு | கணக்குகளைத் தீர்த்து மூடிவிடுதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளைத் தீர்த்து மூடிவிடுதலை ஆரம்பிப்பதற்கு, முன்னைய இரண்டு வருடங்களில் கலைக்கப்பட்ட கம்பனியின் |

| | |
|---|---|
| | அல்லது தொடர்புடைய கம்பனியின் பணிப்பாளராக இருக்கும் ஒருவர் கலைப்பாளராக நியமிக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தும் துணைக் கம்பனியின் பணிப்பாளரொருவர் கலைக்கப்படுகின்ற கம்பனியான பேலியாகொட வெயார் ஹவுஸ் தொகுதிக் கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ii) 330 ஆம் பிரிவு | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக கணக்குகளைத் தீர்த்து மூடிவிடுதல் இடம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் கணக்குகளைத் தீர்த்து மூடிவிடுதலை ஆரம்பிக்கும் திகதி முதல் முதலாவது ஆண்டின் இறுதியின் போதும் மற்றும் அடுத்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போதும் அல்லது வருட இறுதியிலிருந்து 03 மாதம் அல்லது பதிவாளரினால் அனுமதி வழங்கப்படக்கூடிய கால எல்லையில் அல்லது முன்னைய இலகுவான தினத்தில் கலைப்பாளரினால் கம்பனியின் பொதுச் சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் மேற்கூறப்பட்ட நிறுவனத்தில் அந்த வகையில் நடாத்தப்பட வேண்டிய பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை. |
| (ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாக நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 45 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | ஊழியர் சேமலாக நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படி கவனத்திற் கொள்ளப்படாமையின் காரணமாக 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 116,085,396 ஆகும். |
| (உ) 2003 இன் 39 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பொது வசதிகள் அதிகாரச் சட்டம் | வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டுத் தொகுதிக்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையில் சான்றிதழ் பெறப்பட வேண்டிய போதிலும் நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் மூலம் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட அனேக வீட்டுத்தொகுதிகளுக்காக இந்தச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | |
| (i) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் சிபாரிசு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியாலாளர்கள், பூகோள விஞ்ஞானிகள், |

| | | |
|---|---|---|
| | | சட்டத்தரணிகள், கணக்காளர்கள், நகர வடிவமைப்பாளர்கள் மற்றும் அளவிடை ஆய்வாளர்கள் போன்ற தொழில்களுக்காக ரூபா 15,000 மாதாந்த தொழில்தகைமைப் படியொன்று 2014 யூலை 01 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 171 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 27,930,000 தொகையும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 25,605,000 தொகையும் அதற்காகச் செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) | 2016 மார்ச் 09 ஆந் திகதிய 05/2006 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | ❖ மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திறைசேரியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளாமலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரசபையின் தலைவருக்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும் மாதத்திற்கு உரித்தான ரூபா 50,000 போக்குவரத்துப் படியை விஞ்சி முறையே மாதத்திற்கு ரூபா 80,000 மற்றும் ரூபா 70,000 வீதம் போக்குவரத்துப்படி செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதன் படி செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 960,000 ஆகும்.<br><br>❖ அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காத மற்றும் உரிய பதவியுயர்வு நடைமுறைகளுக்குப் புறம்பான பதவிகள் கையளிக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை வாகனபடியாக ரூபா 1,850,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ❖ தனியார் வாகனமொன்றை தனது உத்தியோகபூர்வ பாவனைக்காப் பயன்படுத்தி படிகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரசபையின் 23 உத்தியோகத்தர்களுக்கு சாரதிகள் வழங்கப்பட்டு அந்த சாரதிகளின் சம்பளம் மற்றும் மேலதிக நேரடிப்படியாக ரூபா 30,186,085 தொகை மீளாய்வாண்டில் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது. |
| (iv) | 1994 யூன் 17 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 23/94 | ❖ அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட சபைகளில் நிரந்தர பதவிக்காக ஆட்சேர்க்கும் ஆகக்கூடிய வயதெல்லை 45 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும், அதிகாரசபையிலிருந்து சேவையிலிருந்து சுயமாக விலகி ஓய்வூதியப் பணிக்கொடையும் பெற்றிருந்த 56 வருடங்களை விஞ்சிய ஒரு பெண் உத்தியோகத்தர் அதிகாரசபையின் |

| | | |
|---|---|---|
| | | பணிப்பாளர் (செயற்திட்ட முகாமையாளர்) பதவிக்கு மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே உரிய பதவிகள் ஆரம்ப சம்பளப்படி நிலையில் வைப்பதற்குப் பதிலாக அந்தப் பதவியின் பதிளைந்தாவது சம்பளப்படி நிலையில் அமர்த்தி 06 மாதங்கள் கழிவதற்கு முன் பிரதி பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை) பதவிக்கு உயர்த்தப்பட்டிருந்தார். |
| (v) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | ❖ அதிகாரசபைக்கான செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு பதவியுயர்வு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியின் புதிய சம்பளக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் அதனை அமுல்படுத்துவதற்கு தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் உத்தேச பதவியணிக் கூட்டிணை பயன்படுத்தி முன்னைய அங்கீகாரத்தின் கீழ் அதிகாரசபையால் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>❖ இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், பதவிகளுக்குரிய பதவியுயர்வுகளை வழங்கும் போது புள்ளி வழங்கும் திட்டம் தொடர்பாக உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்ததும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை<br>--------------------------------------------------------- | |
| (i) | 2001 சனவரி 26 ஆந் திகதிய PF/PE 12 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளில் கணக்குகள் மற்றும் வங்கி நடவடிக்கைகள் அரச வங்கிகளிலிருந்து மாத்திரம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறும் வகையில் தேசிய அபிவிருத்தி வங்கியான தனியார் வங்கியில் கணக்குகள் திறக்கப்பட்டு வீடுகளை விற்பனை செய்வதற்காக தவணை அடிப்படையில் பெறவேண்டிய பணத்தை வைப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2016 சனவரி 08 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மதியுரையாளர்களைச் சேர்க்கும் போது வரிசை அமைச்சின் அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அவ்வாறான அங்கீகாரமின்றி 12 மதியுரையாளர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 9,496,252 தொகையொன்று |

| | |
|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சில மதியுரையாளர்கள் அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே சேர்க்கப்பட்ட மதியுரையாளர்களின் செயலாற்றல் தொடர்பான அறிக்கையும் காணப்படாதிருந்ததுடன் சில மதியுரையாளர்களின் சேவைக்காலம் வருடத்திற்கு வருடம் நீடிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| ❖ 4.2.6 ஆம் பந்தி | அதிகாரசபையின் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| ❖ 8.2.3 ஆம் பிரிவு | துணைக்கம்பனியாக அதிகாரசபையால் 2014 நவம்பர் 21 ஆந் திகதி தாபிக்கப்பட்ட Urban – Investment & Real State தனியார் கம்பனி, Urban – Investment & Hotel Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி, Waters Edge Hotel Develeopment கம்பனி என்பவற்றைத் தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| ❖ 9.2(ஈ) பிரிவு | அதிகாரசபையின் பதவியணியின் ஒட்டு மொத்தத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| ❖ 9.14 ஆம் பிரிவு | அதிகாரசபையினால் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான செயல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அற்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறில்லையாயின் மனிதவள முகாமைத்துவத்திற்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 1997 சனவரி 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றிக்கை இலக்கம் 116 மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | பொது முயற்சிகளின் உத்தியோகத்தர்கள் அமைச்சின் அல்லது ஏனைய அரச நிறுவனங்களில் சேவைக்காக விடுவிக்கப்பட முடியாதிருந்தமை தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது அதிகாரசபையின் 29 ஊழியர்கள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 16 பேர்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 11,511,730 தொகையை மீளளிப்புச் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) 2004 சனவரி 03 ஆந் திகதிய 01/2003 ஆம் இலக்க பொது | அதிகாரசபையால் வயது 60 வருடங்களை விஞ்சிய ஓய்வுபெற்ற 08 உத்தியோகத்தர்களுக்கு |

| | | |
|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கை | பல்வேறு நடவடிக்கைகளுக்காக பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மாதாந்தம் ரூபா 27,000 முதல் ரூபா 85,000 இற்கிடையிலான பல்வேறு வீச்சின் கீழ் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஏ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் V ஆவது பட்டோலையின் 7 ஆம் பந்தி | அதிகாரசபையினால் சில வருடங்களுக்கு முன்னர் 1868 அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற மாற்றங்கள் செய்தல் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களை சட்டரீதியாக்க முடியுமாயின், மேவுகை அங்கீகாரத்திற்கான கட்டணத்தையும், பயன்பாட்டை மாற்றுவதற்கான கட்டணத்தையும் அதிகாரசபையினால் அறவிட்டு அந்த நிர்மாணங்களை (சட்டரீதியாக்குவதற்கோ அல்லது அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 1987 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 8 ஆம் இலக்க மற்றும் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | அபிவிருத்தியடைந்த அதிகாரப் பிரதேசமாக தீர்மானிக்கப்பட்ட பிரதேசங்களுக்குரிய சில உள்ளூராட்சி நிறுவனங்களினால் அதிகாரசபையில் சேவைக் கட்டணத்தை வைப்புச் செய்வதற்குரிய வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2016 சனவரி 29 ஆந் திகதி SEC 2016/02 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (வற்) திருத்தம் தொடர்பான சுற்றறிக்கை | 2016 சனவரி 01 முதல் 2016 சனவரி 13 வரையான காலத்தில் 12.5 சதவீத பெறுமதிசேர் வரி (VAT) விகிதத்தின் கீழ் மூலதன நிரற்படுத்தப்பட்ட பொதுக் கம்பனியிலிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 9,278,763 வரித் தொகை வரிசெலவுத்தாள் மூலம் மீண்டும் அக்கம்பனிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியில் இலாபம் ரூபா 817 மில்லியன் மற்றும் அதிகாரசபையின் இலாபம் ரூபா 198 மில்லியன் ஆக இருந்தன. முன்னைய ஆண்டில் தொகுதியினதும் அதிகாரசபையினதும் இலாபம் மற்றும் நட்டம் முறையே ரூபா 320 மில்லியன் மற்றும் ரூபா 133 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொகுதியினதும், அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 497 மில்லியன் மற்றும் ரூபா 331 மில்லியன் தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதிகாரசபையினால் மூலதனமாக்கப்பட்ட தொகுதிக் கடன் வட்டிக் கிரயத்தை மீளளிப்பதற்காக மிகையாகப் பெறப்பட்ட ரூபா 1,053 மில்லியன் ஏனைய வருமானங்களின் கீழ் இனங்காணுதல் மேற்கூறப்பட்ட நிதிவிளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய ஆண்டுகளின் போது இலாபம் பெறப்பட்டிருந்தது. எனினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வருமான வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,425 மில்லியன் தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,927 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 0.35:1 ஆக இருந்ததுடன் சிறந்த தொழிற்படு மூலதன முகாமைத்துவமொன்றைப் பேணிச் செல்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. எனினும், நடைமுறை விகிதத்தில் மாற்றமொன்று இல்லாத போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் முறையே ரூபா 2,777 மில்லியன் மற்றும் ரூபா 7,555 மில்லியன் வீதம் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்தது.

### 3.3 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

கறாபிட்டிய நகர அபிவிருத்திக்காக கறாப்பிட்டிய நகர மத்தியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்து கையேற்கப்பட்ட 2 ஏக்கர் 32 பேர்ச் அளவான காணியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக, அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு எதிராக இடைக்காலத்தடை கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த நீதிமன்றக் கட்டளைக்காக போதியளவான விடயங்கள் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்து இடைக்காலத் தடை உத்தரவை அகற்றுவதற்கு 04 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும், போதியளவான நடவடிக்கைகள் அதிகாரசபையின் சட்டப் பிரிவின் மூலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரசபையின் உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நகர அபிவிருத்திக்குரிய ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்துதல், நகர அபிவிருத்திக்குரிய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கையேற்றல் மற்றும் நகர காணிகளை பயன்படுத்துதல் தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் என்பன அதிகாரசபையின் பிரதான பணிகளாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்திக்குரிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டில் செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் படி அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,252.9 மில்லியன் தொகையான 22 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 409 மில்லியன் தொகையான 04 செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் வேலைபூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 8,704 மில்லியன் கிரயமான 15 செயற்திட்டங்களில் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திற்கு குறைவாக இருந்தது.

(ஈ) 1978 இல் 41 ஆம் இலக்க நகர சபை அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 243 நகர அபிவிருத்தி வலயங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் 42 வலயங்களுக்கு மாத்திரமே அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது நீண்ட கால குத்தகை முறையின் கீழ் அபிவிருத்திக்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கும் மருதானை மற்றும் ராஜகிரிய இல் அமைந்துள்ள 03 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவினை உடைய 02 காணிக்கூறுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி வரையிலும் அந்தக் காணிக் கூறுகளால் இரண்டிற்காகவும் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 1,998.7 மில்லியன் எஞ்சிய நீண்ட காலக் குத்தகைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 11 வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டு நலனாளிகளிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 93 மில்லியனாக இருந்ததுடன் அதிலும் சிசிர உயன மற்றும் மூவதொர உயன வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டு நலனாளிகளிடமிருந்தும் அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பெறுமதி முறையே ரூபா 18 மில்லியன் ரூபா 38 மில்லியனாக இருந்தன.

(இ) பலாங்கொடை நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கடைகளில் 02 கடைகள் 18 வருடங்களுக்கு மேல் நிலுவையாகக் காணப்பட்ட பயன்பாட்டுக் கட்டணங்களின் பெறுமதி (fee for use) ரூபா 1,932,056 ஆக இருந்ததுடன் பஞ்சிகாவத்த வீதி செயற்திட்டத்தின் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒரு வாடகையாளரிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட பயன்பாட்டுக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,685,860 ஆக இருந்தது. அவ்வாறே கொழும்பு வெல்லவீதி செயற்திட்டத்தில் 03 கடைகளில் இருந்து 17 வருடங்களுக்கு மேல் நிலுவையாகக் காணப்பட்ட பயன்பாட்டுக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,687,787 ஆக இருந்த போதிலும் நிலுவைத் தவணைப்பணத்தை அறவிடல், உடன்படிக்கை உரித்தை இரத்துச் செய்தல் அல்லது அந்தக் கடைகளில் உரிமைத்துவத்தை அதிகாரசபைக்குக் கையேற்றல் போன்ற வழிமுறைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 06 குத்தகை செயற்திட்டங்களுக்குரிய பெறுமதி சேர் வரி [VAT] மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி [NBT] தவிர்த்து வரித் தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் குத்தகைப் பெறுமதியின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 25.1 மில்லியன் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 2.24 மில்லியன் என்பன 05 வருடங்கள் முதல் வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(உ) அரச ஊழியர் வீடமைப்பு செயற்திட்டத்தின் நாளாந்த முதலீட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியான மேற்பார்வையுடன் இடம் பெறாமையினால் சில தினங்களில் நடைமுறைக் கணக்கில் ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட மீதியொன்று காணப்பட்டமையால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பெறக்கூடியதாக இருந்த நாளாந்த வட்டி வருமானங்களில் ஒரு பகுதி இழக்கப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்க ஊழியர் வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைக் கொள்வனவு செய்த அரச ஊழியர்களிடமிருந்து பங்குப் பணமாக அறவிடப்பட்ட தொகையிலிருந்து ரூபா 1490.66 மில்லியன் தொகை உயர் வட்டி விகிதமொன்று கிடைக்கின்ற நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்வதற்குப் பதிலாக குறைந்த நலனொன்று கிடைக்கின்ற திறைசேரி உண்டியல்களில் மீள்முதலீட்டிற்காக பயன்படுத்தியதன் காரணமாக கிடைக்கக்கூடியதாக இருந்த உயர் வட்டி வருமானமொன்று

இழக்கப்பட்டிருந்தது. திறைசேரி மீள் முதலீடுகளில் பயன்படுத்துவதனை விட நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்தியிருக்குமாயின் வட்டி வீதம் 1 சதவீதத்தால் அதிகரிக்கும் போது வருடமொன்று காலத்தில் உரித்தற்றுப் போன வட்டி வருமானம் ரூபா 14.9 மில்லியன் அளவில் இருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(எ) அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்ற வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய உயர் சந்தைத் தொகுதி, கழம்பு கோல்ட் சென்டர், நடைபாதை சந்தைத் தொகுதி மற்றும் பொரளை பேமன் பார்க் சந்தைத்தொகுதி போன்ற செயற்திட்டங்கள், திட்டமிடல் நலிவுகள் மற்றும் அந்த சந்தைத் தொகுதிக்காக போதியளவான நுகர்வோர்கள் வருகை தராமை போன்ற காரணங்களினால் தோல்வியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி அளவில் 204 கடைகள் மூடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களை மீள செயற்படுத்துவதற்கும் மற்றும் அந்தச் தொகுதிகள் தொடர்பாக விரிவான விளம்பரம் ஒன்றை வழங்குவதற்கான போதியளவான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நாவின்னப் பிரதேசத்தில் விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்தாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது கைப்பற்றப்பட்ட 158 பேர்ச் காணிக்கு ஈடாகும் வகையில் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருந்த மாலபேயில் அமைந்துள்ள 296 பேர்ச் காணி நாவின்னவில் அமைந்துள்ள காணி உரித்துக் கம்பனிக்கு வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் கையேற்கப்பட்ட காணிக்காக பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாமல் ஈடுசெய்யப்பட்ட நாவின்னயில் அமைந்துள்ள காணியின் உரிமையாளருக்கு ரூபா 55 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் வட்டியாக செலுத்த வேண்டிய ரூபா 34.41 மில்லியனில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 5 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள வீடுகளில் இருந்து உரிய கட்டணம் அறவிடப்படாமையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாது காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 104,209,943 ஆகும்.

(ஒ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் துணைக் கம்பனியாக 2014 நவம்பர் 21 ஆந் திகதி உருவாக்கப்பட்ட Urban Investment & Real Estate தனியார் கம்பனி, Urban Investment & Hotel Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி மற்றும் Waters Edge Hotel Development கம்பனி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கூறப்பட்ட கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(ஆ) பிரிவின் பிரகாரம் வருடமொன்று கடந்தவுடன் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் மூலம் மூடிவிடும் நிலைமையின் கீழ் காணப்பட்ட போதும் அது தொடர்பாக பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருக்கவில்லை.

(ஓ) (i) I ஆவது பகுதி மருதானை செயற்திட்டத்தின் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,073,344 நிலுவை வாடகை மீதியொன்றுடன் வாடகையாளரிடமிருந்து வாடகை உரித்தை இரத்துச் செய்வதற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உரித்தை இரத்துச் செய்வதற்கோ அல்லது கணனி கணக்கு முறைமையின் மூலம் மாதாந்த தவணை கணக்கு வைத்தல்களை தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2012 சனவரி 30 ஆந் திகதியின் பின்னர் தம்புள்ள சந்தைத் தொகுதியின் பொறுப்புத் தன்மை, ரங்கிரி தம்புலு விகாரைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், விகாராதிபதி தேரரினால் அந்தப் பொறுப்பளித்தன்மை கையேற்பதற்கு விருப்பமின்மையின் காரணமாக அந்தக் கையளித்தல் தற்போது அமுல்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. கடை உரிமையாளர்கள் தொடர்சியாக வாடகை செலுத்தாது புறக்கணித்தமையினால் தேவையான பிரகாரம் உடன்படிக்கை இரத்துச்செய்து மேற்கூறப்பட்ட நிலையங்களின் உரித்தை அதிகாரசபைக்குப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஏனைய முதலீட்டு செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) குணசிங்கபுர வணிக செயற்திட்டத்தின் ஒரு கடை உரிமையாளர் மரணமடைந்திருந்ததுடன் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 12,639,906 நிலுவை வாடகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டில் இறுதியளவில் அந்தக் கடையின் உரிமையாளரின் பெயரில் மாதாந்த வாடகை வருமானம், கணனிக் கணக்குகள் முறைமையின் மூலம் இனங்காணப்பட்டிருந்த போதும் அந்த வாடகை வருமானத்தை கணக்கீடு செய்வதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தக் கடையை மீளக் கைப்பற்றிக்கொள்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(கா) 1983 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட தலவத்துகொட தஹஅட்டலங்க மற்றும் தொலஸ்லங்க வயலின் (ஆரம்ப வரைபட நிலக்கூறு 5516 என்ற வரைபடத்தில் கூறு இலக்கம் 21 இல் காண்பிக்கப்படும் நிலப்பகுதி) 01 ஏக்கர் 29.7 பேர்ச் (189.7 பேர்ச்) அளவொன்று அருகில் இருக்கின்ற குடியிருப்பாளரினால் அனுமதியற்ற வகையில் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் அந்த நிலக்கூறை மீண்டும் அதிகாரசபைக்கு கையேற்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) அதிகார சபையினால் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ERP (Enterprise Resource Planning) செயற்பாடுகளை முன்கொண்டு வராமல் கணக்கீட்டு கணனி மென் பொருளொன்றை ஸ்தாபிப்பதற்கும், பராமரிப்பதற்குமாக தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 8,300,000 இலிருந்து ரூபா 4,150,000 தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை செய்யப்பட்ட 120 நாள் ஒப்பந்தக் காலத்தில் கணக்கீட்டு கணனி மென் பொருள் (Customized Accounting Software Package) ஸ்தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இது வரையில் 1½ வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்த மென்பொருளை உரிய பிரகாரம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கான நிதி மதிப்பீடு மற்றும் அமைச்சரவை வழங்கிய ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட காணிகள் முதலீட்டு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தி நிதியம் கண்டறிய வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் விடுவிக்கப்பட்ட எந்த ஒரு காணியும் அவ்வாறான வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் வியாபார திட்டங்கள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2012 யூலை 31 இல் நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தின் போது பேலியாகொட வெயார் ஹவுஸ் கம்லெக்ஸ் லிமிடெட் கம்பனி அத்திகதி முதல் செயற்படும் வகையில் சுயமாகவே கணக்குகளைத் தீர்த்து மூட வேண்டியதாக விஷேட முன் மொழிவொன்று அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம்

கடந்திருந்தும் கம்பனியைக் கலைப்பதற்கோ அல்லது முன்மொழிவினை இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான கோட்டை டீ.ஆர்.விஜயவர்தன மாவத்தை எல்லையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 2 ரூட் 21.4 பேர்ச் அளவான காணி ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் கீழ் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. தலைவரின் 2016 நவம்பர் 17 ஆந் திகதிய இலக்கமின்றிய கடிதத்தின் மூலம் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதியை விட ரூபா 330 மில்லியன் குறைவாக இந்தக் காணியை குத்தகைக்கு வழங்குவதற்காக இணக்கப்பாடு தெரிவித்தமையின் காரணமாக இந்தக் காணியை அகற்றும் போது ரூபா 330 மில்லியன் நட்டமொன்றை அதிகாரசபைக்கு ஏற்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகங்களில் சகல உத்தியோகத்தர்களையும் மற்றும் ஏனைய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 50 உத்தியோகத்தர்களுக்கு அந்த உத்தியோகத்தாவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 1/3 ஆன பிரகாரம் விஷேட படி ஒன்று திறைசேரி அங்கீகாரமின்றி முன்னைய சில வருடங்களில் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 2,143,394 ஆகும். அவ்வாறு விஷேட படி செலுத்துவதற்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்த அடிப்படை கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் துணைக்கம்பனியான நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியினால் ரூபா 17,500,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட டொயோட்டா லேன்ட்குரூசர் வகையின் ஜீப் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் அதிகாரசபையின் தலைவரினால் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தின் பராமரிப்புச் செலவினங்கள் யாவும் மீளாய்வாண்டின் போதும் துணைக்கம்பனியினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டமொன்றின் செயலமர்விற்காக செலவிடப்பட்ட ரூபா 1,195,046 தொகையான சிற்றுண்டிச்சாலை மற்றும் மண்டபக் கட்டணம் அதிகார சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதியில் ஒரு ஏக்கரும் 23.1 பேர்ச் பரப்பளவுடைய காணியில் 40 மாடிகளையுடைய டவர் கட்டிடம் (போடியம்) நிர்மாணிப்பதற்காக 1993 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபை ரூபா 92 மில்லியனையும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 120 மில்லியனையும் செலவிட்டிருந்தன. 1993 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டிடத்தின் 3 மாடிகளில் (43,000 சதுர அடியைக் கொண்ட) கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடத்தின் குறைபாடுகளான அபிவிருத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் வெளிக் காணிகளைக் கைப்பற்றி அபிவிருத்தி செய்தல் போன்றவைகளுக்கு வ/ப ஒஷன் விச் டிவலப்மன்ட் தனியார் கம்பனி என்ற

பெயரில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் கூட்டுமுயற்சி வியாபாரமொன்றை ஆரம்பித்திருந்தது. அந்தக் தனியார் கம்பனியினால் கட்டிடத்தின் கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் 1993 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அதிகாரசபைக்கு எந்த ஒரு இலாபமும் கிடைத்திருக்கவில்லை. நீண்டகாலமாக குத்தகை அறவிடப்பட்டது வருடமொன்றிற்கு ரூபா 100 என்ற பெயரளவிலான வாடகையின் கீழ் 99 வருடங்களுக்கு குத்தகை அந்த ஆதனம் அத்தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டமையினால் அதிகாரசபை இட்ட முதலீட்டிற்கு எந்தவொரு பிரதி பலனும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபை தொடர்பான பணியல்லாத விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரமொன்றை நிர்மாணிக்கும் ஆரம்ப விழாவிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 6,642,865 செலவினமொன்று அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,512,000 தொகை விழாவினை ஒழுங்கமைக்கும் நிறுவனத்திற்கும் மற்றும் ரூபா 828,894 தொகை அதற்கான பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரிப்பதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 500,000 தொகை மற்றும் கொழும்பு காணி மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 36,309,841 தொகை என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் எவ்வித இலாபபங்கும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) கொம்பனித்தெரு மீள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய காணியில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்காக மாடி வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட இருந்த போதிலும் காணி அபிவிருத்தியாளரினால் நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரின் தாமதத்தின் அடிப்படையில் உரிய செயற்திட்டம் தாமதம் அடைந்திருந்தது. அதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் உரிய நிர்மாணப் பணிகளின் மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 5,496,000 தொகையான மேலதிக மதியுரைக் கட்டணமும் காணியில் குடியிருந்தவர்களுக்கான மாடி வீட்டு அலகுகளை வழங்கும் வரை மாதாந்த வாடகை ரூபா 61,198,000 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 66,694,000 தொகை அதிகாரசபையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி அபிவிருத்திக் கம்பனியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் அதிகார சபையினால் Enterprise Resource Planning (ERP) செயல்முறை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக தேவையான மதியுரை சார்ந்த சேவைகளை வழங்குவதற்கு நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 195.7 மில்லியனாகும். அதில் மதியுரை சார்ந்த செயற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 5,705,000 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 3,803,995 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் உரிய நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

ஏனைய செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தும் நோக்கில் 2011 ஆம் ஆண்டில் சாமர்ஸ் கிரைனரிஸ் செயற்திட்டத்தின் கடைகள் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் அக்கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி அளவில் அறவிடவேண்டிய நிலுவை வாடகைத் தொகை ரூபா 13,870,076 ஆகும். எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தக் காணியில் புதிய செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் உரிய சுற்றாடலில் வேறு எந்த முதலீட்டுப் பணிகளுக்கும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத 30 பதவிகளுக்காக 57 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் கடந்த சில வருடங்கள் முதல் அதிகாரசபையில் சிரேஷ்ட, நிறைவேற்று மற்றும் மத்திய மட்டங்களில் 22 முகாமைத்துவப் பதவிகளுக்கான 42 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் மற்றும் 8 பதவிகளுக்கான 13 உத்தியோகத்தர்களது மிகை என்பன காணப்பட்டமை அதிகாரசபையின் செயலாற்றல்களுக்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் துணைக் கம்பனியான நகர முதலீடு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் கீழ் சேவையாற்றுகின்ற 03 முகாமையாளர்களும் 04 கட்டிட வடிவமைப்பாளர்களும் அதிகாரசபையில் சேவைக்காக இரண்டாம் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக துணைக் கம்பனியால் தொடர்ச்சியாக 03 வருடங்களுக்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 7,046,465 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு கம்பனியின் நிரந்தர உத்தியோகத்தர்கள் அதிகாரசபையின் சேவைக்காக நியமிக்கப்படுவதனால் கம்பனியின் நடவடிக்கைகளும் சரியான முறையில் மேற்கொள்வதற்கு தடையாக இருக்கவில்லை என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(இ) பதவிக்குரிய உத்தியோகத்தருக்கு காணப்பட வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமலும் குறித்த பதவியுயர்வு நடைமுறைகளுக்கு புறம்பாகவும் பிரதிப் பணிப்பாளர் (காணி) பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு முறையற்ற வகையில் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 05 பதவி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை பதவியுயர்த்தும் போது விண்ணப்பங்கள் கோரி நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துதல் போன்ற முறையான செயல்நடவடிக்கைகள் பின்பற்றப்படாமல் பணிப்பாளர் (திட்டமிடல் வடகிழக்கு) பணிப்பாளர் (அபிவிருத்தித் திட்டமிடல்) பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) மற்றும் பணிப்பாளர் (பூகோள தகவல் முறைமை) போன்ற பதவிகளுக்காக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை PED/12 ஆம் இலக்க 9.10 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரமின்றி அப்பிரிவின் தலைவர் என்ற பெயரில் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டு அந்த பதவிகளுக்காக 05 உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அதில் பதவி ஏற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட வேண்டிய முறையான செயல்நடவடிக்கைகள் எதுவும் பின்பற்றப்படாது இருந்ததுடன் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய முறையான செயற்பாடுகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பணிப்பாளர் பதவிக்காக பதவியுயர்வு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பதவியில் சேவை அனுபவம் 05 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக குறைந்த பதவியில் ஆகக் குறைந்த சேவை அனுபவம் 7 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையிலும் முறையான அங்கீகாரம் பெறப்படாமல் மாற்றம் செய்யப்பட்டு 7 உத்தியோகத்தர்களுக்காக பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. அதிலும் ஒரு பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக கீழ்ப்பதவியில் ஆகக்குறைந்த சேவை அனுபவம் 07 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரை சேவைமூப்பு அடிப்படையில் குறைக்கப்பட்டு 03 வருட சேவை அனுபவம் மாத்திரம் உள்ள உத்தியோகத்தருக்காக பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(எ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்காக ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைச் செய்வதற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கைக்காக மேலதிக ஊழியர் எண்ணிக்கை தேவையானது எனக் காண்பித்து 217 உத்தியோகத்தர்களையுடைய பதவியணி ஒன்றுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் ஒப்பந்த அடிப்படையில் 60 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) செயற்திட்டத்தின் நடவடிக்கைக்காக அதிகாரசபையில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 19 உத்தியோகத்தவஷர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு நியமிக்கும் போது மேலதிக செயற்திட்ட பணிப்பாளர் பதவி, 06 பிரதி செயற்திட்ட பணிப்பாளர் பதவி, 04 உதவி செயற்திட்ட பணிப்பாளர் பதவி மற்றும் 04 செயற்திட்ட முகாமையாளர் பதவி என செயற்திட்டத்திற்காக அசாதாரணமான உயர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தின் பதவியணியினரின் கிரயம் அதிகரித்திருந்தது.

(iii) செயற்திட்டத்தின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் (செயற்திட்ட முகாமையாளர் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்) பதவிக்கு விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்யும் போது நேர்முகப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளி தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் இரண்டாவதாக புள்ளியைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு பதவி வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டின் போதும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியுள்ள மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டிய உபாய வழிகள், மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியில் மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஒவ்வொரு பிரிவினதும் இலக்கிடப்பட்ட பணிகளுக்குரிய உள்ளபடியான தரவுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்தப் பிரிவுகளின் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

காணப்படுகின்ற சில உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளும் நலிவான நிலையில் காணப்படுவதாக அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை அமுல்படுத்துவதற்கான வழிகள் நிறுவனத்தில் காணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதிகாரசபையின் பணிப்பொறுப்புக்களை விரிவுபடுத்தும் நோக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களில்

அதிகாரசபையின் செயலாற்றல் கணக்காய்விற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களை தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதியளவான கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் சில அவதானிப்புகள் தொடர்பில் பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(அ) வோட்டர்ஸ் ஏஜ் கம்பனி அமைந்துள்ள காணியில் 7.35 ஏக்கர் அளவு 128 அனுமதியற்ற கைப்பற்றல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற நபர்களை அகற்றுவதற்காக முறையான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கண்டி மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி வலய திட்டமிடலின் இயற்கையான பாதுகாப்பு வலயத்தின் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்த போதும் அதிகாரசபையால் கட்டிட நிர்மாணத்திற்காக ஆரம்ப விடுவிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் கொட்டுவே கொட, ராஜகிரிய, பெரேரா மாவத்தையில் ஆரம்ப வரைபட இல. கொ 6399 ஆம் இலக்க நிலவரைபடத்தில் 6,7 மற்றும் 8 ஆம் இலக்க காணிக் கூறுகள் முறையற்ற வகையில் நீண்ட காலரீதியில் குத்தகை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணிக் கையளிப்பின் போது முன்னாள் பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) இனால் சாதாரண நடைமுறைகளுக்குப் புறம்பாக முறையற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி மாநகர அதிகார பிரதேசத்திற்குரிய வெளியிடப்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் இடமளிக்கக்கூடிய கட்டின் விகிதம் 2.5 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையின் மத்திய மாகாண கிளை மேற்கூறப்பட்ட கட்டின் விகிதத்தை விஞ்சி இருந்த கட்டிடங்களுக்காகவும் விடுவிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் மத்திய மாகாண கிளையினால் நிராகரிக்கப்பட்ட கட்டிடங்களின் ஆரம்ப விடுவிப்பு விண்ணப்பங்களுக்காக ஆரம்ப திட்டமிடல் விடுவிப்பு சான்றிதழ் வழங்குவதற்கு மாகாண பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

(ஊ) அதிகார சபைக்குரிய நந்தாராம வீடமைப்பு தொகுதிக்கு அடுத்துள்ள இஹல சந்தையின் பெறுமதியுள்ள 5.32 பேர்ச் வெற்றிடக் காணி அனுமதியற்ற வகையில் வெளித்தரப்பினர் ஒருவர் கைப்பற்றி இருந்த போதிலும் அதனை விடுத்துக் கொள்வதற்கு அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(எ) கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களுக்குரிய பிரதேச செயலாளர்களினால் அதிகாரசபையின் மேற்பார்வை கையேற்கப்பட்ட 11.44 ஏக்கர் காணியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 16 மில்லியன் செலவில் புறக்கோட்டை சோண்டர்ஸ் பிரதேசத்தில் நடைபாதை வியாபாரிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட மாற்று விற்பனை நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நீதிமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்குக் கையளிக்கப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலுக்கு செலுத்துவதற்கு கட்டளை இடப்பட்ட ரூபா 406,483,000 தொகையிலிருந்து மேலும் ரூபா 261,483,000 தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஒ) 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் II ஆவது பகுதியில் 16(1) உ பிரிவின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (USDA) ரூபா 207,331,767 தொகை அனுப்பி வைக்கப்படாது நகர அபிவிருத்தி அதிகார சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) கொழும்பு துரங்க தரங்க மைதானத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 05 மில்லியனை விஞ்சிய ரூபா 40.64 மில்லியன் கூட்டுப்பெறுமதியான மூலதனப் பொருட்கள் மற்றும் ரூபா 72.36 மில்லியன் கூட்டுத்தொகையான ஏனைய செயற்திட்டங்களின் மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) வெள்ளவத்தை மயூரா பிரதேச வீடமைப்பு தொகுதியின் பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் மற்றும் உடைத்த பாகங்களை விற்பனை செய்வதற்காக இரண்டு ஒப்பந்தகாரர்களினால் முறையே ரூபா 12,200,240 மற்றும் ரூபா 3,800,000 தொகைகளை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு இரண்டு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர்களுக்கு அந்தப் பணிகள் கையளிக்கப்படாது அதிகாரசபையின் பணத்தில் ரூபா 6,296,440 தொகை செலவிட்டு அக்கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டு உடைத்த துண்டுகள் ரூபா 750,000 இற்கு விற்கப்பட்டமையின் காரணமாக அதிகாரசபைக்கு ரூபா 17,746,680 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(க) மாதிவல பிரதேசத்தில் அமைந்துள்ள ரூபா 85 மில்லியன் பெறுமதியான 103 பேர்ச் காணிக்காக உரிய பிரகாரம் எல்லை குறிப்பிட்டு பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமையின் காரணமாக வெளிநபர்களினால் காணியில் அனுமதியற்ற நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்து நிரந்தர பயிர்களும் பயிரிட்டிருந்தனர்.

(கா) 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 229/2014 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் பேலியகொட வெயா ஹவுஸ் துணைக்கம்பனியின் வாகனங்களில் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களில் இணங்காத செயற்திட்டமான கொழும்பு நகரத்தின் குடிசைகளில் குடியிருப்பவர்களுக்கு 68,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கு நிதியினை வழங்கும் நோக்கில் அதிகாரசபையினால் 2010 ஒக்டோபர் மாதத்தின் போது ரூபா 10 பில்லியன் பெறுமதியான 5 வருடங்களில் விடுவிக்கக் கூடிய தொகுதிக் கடன்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும் தொகுதிக்கடன் விநியோகிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமான கொழும்பு நகரத்திலுள்ள 142 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வியாபாரத் திட்டங்களைத் (Business Plan) தயாரித்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உத்தேச வீட்டு அலகுகள் 68,000 இல் 5,203 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு மக்களுக்கு உரித்து கையளிக்கப்பட்டிருந்தது.

(கீ) 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/09 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தக மானியின் ஏற்பாடுகளுக் முரணாக பொரலஸ்கமுவ அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொருத்தமற்ற நிலக்கூறு ஒன்றில் கீழ் மாடி உள்ளடங்கலாக 05 மாடிகளையுடைய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை அனுமதி வழங்கியிருந்தது.

(கு) மத்திய மாகாண வலயத்திற்குரிய 1126.12 சதுர மீற்றர் கட்டிடம் ஒன்றிற்காக ரூபா 6,081,048 சேவைக்கட்டணம் அறவிட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அறவிடப்படாமல் கட்டிடம் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப திட்டமிடல் விருவிப்புச் சான்றிதழ் அந்த மாகாணத்தின் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

(கூ) நகர புனர்வாழ்வு செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ❖ 10 வீடமைப்புத் தொகுதிகளின் 24 ஏக்கர் அளவான காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

- ❖ அரசாங்கப் பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணான நிர்மாண ஒப்பந்தம் கையளித்தமை, ரூபா 20.8 பில்லியன் தொகையான நிர்மாண ஒப்பந்தம் கேள்வி கோரலின்றி (Unsolicited Proposal) கையளிக்கப்பட்டமை.

- ❖ நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் கைவிடப்பட்டமை.

- ❖ வங்கிப் பிணைகள், தரகு மற்றும் சட்ட சேவைக்காக ரூபா 222 மில்லியன் பயனற்றதாக செலவிடப்பட்டமை.

- ❖ 65 வீட்டு அலகுகளுக்காக ரூபா 2,098 மில்லியன் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை, 13 ஒப்பந்த வேறுபாடுகளுக்காக ரூபா 1,066 மில்லியன் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டமை, 39 வீட்டு அலகுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விட ரூபா 143 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டமை.

- ❖ வாடகை உடன்படிக்கை இல்லாமையினால் அதிகாரசபை அறவிடவேண்டிய வாடகைப் பணத்தை குறித்த பிரகாரம் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை.

- ❖ கையளிக்கப்பட்டுள்ள 5203 மாடி வீடுகளை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை.

- ❖ கொழும்பு மாநகர சபைக்கு நிர்மாணக் கிரயத்தை விட குறைவாக 157 வீட்டு அலகுகள் கையளிக்கப்பட்டமையால் ரூபா 137 மில்லியன் நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தமை மற்றும் புகையிரத விடுதிகளில் குடியிருந்து வரும் புகையிரத ஊழியர்களுக்காக நிரந்தர அடிப்படையில் 205 வீடுகள் வழங்கப்பட்டமையினால் புதிய ஊழியர்களுக்கு வீடுகளை வழங்க முடியாதிருந்தமை.

## 5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுமதியற்ற நிர்மாணங்களைப் பரீட்சித்துக் பார்ப்பதற்காக காணப்படுகின்ற அதிகாரசபையின் அமுலாக்கல் பிரிவினால் காலரீதியில் புலனாய்வை மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் இறுதியில் நிர்மாணிக்கப்பட்ட 09 மாடிவீட்டு செயற்திட்டங்களின் கீழ் 4,937 வீடுகள் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வீடுகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வீட்டு நலனாளிகளை உள்ளடக்கிய முகாமைத்துவ கூட்டிணைவைத் தாபிப்பதற்கு கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு முறையான அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஏனைய உப பிரிவுகள் மற்றும் துணைக் கம்பனிகளின் கணக்குகளின் தகவல்கள் சரியாக ஒன்றிணைக்கப்படாமை மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் சரியாக நாளது வரையாக்கப்படாமை. |
| | (ii) ஒரு கணக்கிற்கான வரவு மற்றும் செலவு மீதிகளை உள்ளடக்கிய கணக்குகளின் அனேகமானவைகள் பரீட்சை மீதியில் உள்ளடக்கியிருந்தமை மற்றும் முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் அனேகமானவை பின்னர் மேற்கொள்ளப்பட்டமை. |
| | (iii) கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் குறைபாடுகளின் காரணமாக கணக்காய்வாளரின் விடயப்பரப்பு வரையறுக்கப்பட்டமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினைகள் காணப்பட்டமை. |
| | (ii) கடன்பட்டோர் கணக்குகளை நாளது வரையாக்குதல் தாமதமடைந்தமை மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமை. |
| | (iii) கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடுவதற்கு முறையாக செயல்நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | சரியான மதிப்பீடு தயாரிக்கப்படாமை, செலவினங்களை செய்தல் பாதீட்டுக் கட்டுப்பாட்டின்றி மேற்கொள்ளப்பட்டமையால் போதியளவான முரண்கள் காணப்பட்டமை. |
| (ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம் | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை, சொத்துக்கள் சரியாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை, மெய்மையாய்வு அறிக்கை முறையாக பேணிச் செல்லப்படாமை, காணிப்பதிவேடு காணப்படாமை. |
| (உ) பெறுகை நடைமுறைகள் | போட்டியாளர் கேள்வி கோராது புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (ஊ) மனிதவள முகாமைத்துவம் | பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்த்தல்கள் உரிய நடைமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படாமை மற்றும் வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. |